பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை 11.10.2020 கதிர் 206

## பல்கலைக்கழக மாணவி சுகவீனத்தினாலேயே உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த - களனிப் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவியான - செல்வி யதீசா ஸ்ரீதர் (இருபது வயது) சிறிது காலம் வயிற்றில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். 2

# தீர்ப்பின் பின்னரும் 20 இற்கு எதிரான கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடரும்

## சுமந்திரன் எம்.பி. திட்டவட்ட அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்11

புதிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவில் நான்கு பிரிவுகள் தற்போதைய அரசமைப்பின் முதன்மைச் சரத்துக்களை மீறுகின்றன எனவும், அவை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்படாமல் நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது எனவும் உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. இருந்த போதிலும் நாங்கள் முன்வைத்திருந்த குற்றச்சாட்டுக்களில் பல விடயங்கள் உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தத் தீர்ப்புக்குப் பின்னரும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிரான எமது நிலைப்பாடு உறுதியாகத் தொடரும். எதிரணியில் உள்ள அனைவரும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். 2




## வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது புலமைப் பரிசில்!

கொழும்பு, ஒக்.11

நாடளாவிய ரீதியில் புலமைப் பரிசில் பரீட்சை இன்று வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

நாடு பூராகவும் அமைக்கப்பட்டிருந்த 2936 மத்திய நிலையங்களில் 2

## மேலும் மூன்று இடங்கள் பாதுகாப்பு வலயத்துக்குள்!

கொழும்பு, ஒக்.11

கம்பஹா மாவட்டத்தில் உள்ள மாலிக்கா தென, எலுவாபிட்டிய மற்றும் ஹிக்கடுவ ஆகிய பகுதிகள் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டுள்ளன. 2

## தமிழரசுக்கு காலக்கெடு விதிக்கவில்லை

மன்னார், ஒக்.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய ஊடகப்பேச்சாளர் நியமனம் தொடர்பில் தாம் இதுவரை இலங்கை தமிழரசுக்கட்சிக்கு எந்தவொரு காலக்கெடுவும் வழங்கவில்லை எனத் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். 2

## ரியாஜ் பதியுதீனின் விடுதலை விவகாரம்: அனைத்து ஆவணங்களுடனும் வாருங்கள்!

### சி.ஐ.டியினருக்கு சட்டமா அதிபர் உத்தரவு

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீனின் விடுதலை தொடர்பான அனைத்து விசாரணைக்கோப்புகளுடனும் நாளை முன்னிலையாகுமாறு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான விசாரணை அதிகாரி ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 2

## விதிமுறைகளை மீறி ஹற்றனில் ஆராதனை



கொழும்பு, ஒக் 11

ஹற்றன் பகுதியில் உள்ள கத்தோலிக்க மதஸ்தானமொன்றில் 50 இற்கும் மேற்பட்டவர்களுடன் ஆராதனை நடத்திய ஸ்தானத்தின் பொறுப்பாளருக்கு, ஹட்டன் பொது சுகாதார பரிசோதகர்கள் கடும் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த தேவ ஆராதனையில் 50 இற்கும் அதிகமான மக்கள் கலந்து 2

## மன்னாரில் 2கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

(ந.லோகதயாளன்)

யாழப்பாணம்,ஒக்.11

மன்னார் மாவட்டத்தின் பட்டிதோட்டம், பெரியகடை ஆகிய இரண்டு கிராமங்களும் சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பெயரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 6 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 2

## இயக்கச்சியில் புலமைப்பரிசில் பரீட்சை எழுத இருந்த மாணவிக்கும் கொரோனா

இயக்கச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த மினுவாங்கொடையைச் சேர்ந்த தரம் 5 மாணவி, இன்று காலை புலமைப்பரிசில் பரீட்சை எழுதுவதற்குத் தயாராக இருந்த வேளையில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டிருந்த குறித்த மாணவி இயக்கச்சி சங்கத்தார் வயல் பாடசாலையில் பரீட்சை எழுதுவதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவருக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கை இன்று காலை வெளியாகியிருந்தது. அதில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி 2

## தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றப்பட்ட ஸ்ரீபாத கல்லூரி

### இராணுவம் பொறுப்பேற்பு ; மாணவர்கள் வீட்டுக்கு




ஹற்றன், ஒக்.11

ஹற்றன், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி, தற்காலிக தனிமைப்படுத்தல் முகாமாக இயங்கவுள்ளது. இதற்காக மேற்படி கல்லூரியை இராணுவம் இன்று பொறுப்பேற்றதாக கல்லூரியின் 2

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பம் 3,62,824 மாணவர்கள்; 2,684 நிலையங்கள்

கொழும்பு, ஒக்.11

2020 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாக வுள்ள நிலையில் பரீட்சைகள் திணைக்களம் அது தொடர்பில் மாணவர்களுக்கும் கடமையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கும் விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளை தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 06ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியிலுள்ள 2 ஆயிரத்து 684 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன. அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 62 ஆயிரத்து 824 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் எனவும், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்கு இதுவரை அதற்கான அனுமதிப்பத்திரம் கிடைக்காதிருந்தால் விண்ணப்பதாரர் 2

## மன்னாரில் 2கிராமங்கள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்யப்பட்ட ஆறு பேருமே மன்னார் மாவட்டத்தைச் சாராதவர்களாகவே காணப்படுகின்றனர்.

இருந்தபோதும் கடந்த 8 ஆம் திகதி அங்கு ஒரு கொரோனா நோயாளி இனம் காணப்பட்ட பின்பே அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.

தற்போது இனம்கானப்பட்டவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்பு வரையில் வெளியில் நடமாடியுள்ளனர். மதுபானசாலை உள்ளிட்ட இடங்களிற்கு அவர்கள் சென்று வந்தமை உறுதி செய்யப்படுவதனால் இந்த இரு கிராமத்தினையும் ஒரு வாரங்களுக்கு அல்லது குறைந்த பட்சம் 4 தினங்களிற்கேனும் தனிமைப்படுத்த வேண்டும் என சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கைக்கு அமைவாக தற்போது சுகாதார அமைச்சின் பெயரில் முடக்கப்பட்ட நிலையில் அப்பிரதேசத்தில் 850 வரையான குடும்பங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழரசுக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பங்காளிக் கட்சிகளில் இருந்து இம்முறை ஊடகப் பேச்சளர் தெரிவு செய்யப்பட வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழீழ விடுதலைக்கழகம் ஆகியன வலியுறுத்தி வந்தன. இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்கு தமிழரசுக் கட்சிக்கு தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழீழ விடுதலைக்கழகம் ஆகியன காலக்கெடு வழங்கியதாக ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகி இருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனை தொடர்புகொண்டு வினவிய போது, அப்படி எந்த விதமான காலக்கெடுவும் தங்களால் விதிக்கப்படவில்லை எனத் தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் யார் என்பது அடுத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் - என்றார்.

## இயக்கச்சியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது. அதனால் அவர் பரீட்சை எழுத அனுமதிக்கப்படவில்லை.

குறித்தமாணவியின்தாயார்ஏற்கனவே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜி.சீ.ஈ. உயர்தரப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உப யோகித்துப் பயிற்சி திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடி யும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, www.donets.lk என்ற இணையத்தளத்தில் www.slexams.com மூலம் தரவிரக்கம் செய்துகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விதிமுறைகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர்எனக்கிடைத்ததகவலுக்கு அமையவேகுறித்தநிலையம்சோதனைக்குட்படுத்தப்பட்டது.

அதன்போது145பேர்இந்தஆராதனையில் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றியிருந்தபோதிலும் அரசு அங்கீகரிக்கப்பட்ட 50 பேரை விட அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தமையால் எச்சரிக்கப்பட்டனர்.

இனிவரும் காலங்களில் இந்த நடைமுறைகளை பின்பற்றாவிட்டால் வழக்கு தாக்கல் செய்யப்போவதாகவும் பொது சுகாதா பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

## தனிமைப்படுத்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடாதிபதிகே. துரைராஜசிங்கம்தெரிவித்தார்.

அத்துடன், இங்கு தங்கியிருந்து கல்வி பயின்ற மாணவர்களுக்கு மறுஅறிவித்தல் விடுக்கப்படும்வரை விடுறை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்பான முறையில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதற்காக இராணுவம் 10 பஸ்களை ஈடுபடுத்தியது.

மினுவாங்கொடஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணி பரவலையடுத்து நாட்டில் ஆங்காங்கே கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அவர்களுடன் பழகியவர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

இந்நிலையிலேயே முன்பாதுகாப்பு ஏற்பாடாக ஶ்ரீதாப கல்வியற் கல்லூரியும் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## மேலும் மூன்று .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா தொற்றாளர்கள் 37 பேர் அடையாளம் காணப்பட்டதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் தெரிவித்தார்.

அதற்கமைய இந்த மூன்று கிராம சேவகர் பிரிவிற்கு உப்பட்டவர்கள் 7 ஆவது கிராம சேவகர் பிரிவிற்கு உட்பிரவேசிக்கவோ வெளிச்செல்லவோ முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கம்பஹா பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்ட நபரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

அத்துடன், குறித்த வைத்தியசாலையில் 7 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரியாஜ் பதியுதீனின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபரினால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர் அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் உரிய ஆலோசனையைப் பெறாமல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ரியாஜ் பதியுதீனை விடுதலை செய்தமை தொடர்பில் விளக்கமளிக்கும் பொருட்டே குறித்த அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை சட்டமா அதிபர்ஆராயவுள்ளார்எனவும்நிராராஜயரத்ன குறிப்பிட்டார்.

அத்துடன் ரியாஜ் பதியுதீன் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆள் கொணர்வு மனு ஆகியவை மீளப் பெறப்பட்டமையைத் தொடர்ந்து, அவரை விடுதலை செய்வதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் சட்டமா அதிபர் கவனம் செலுத்தியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

இவை அனைத்தையும் ஆராய்ந்து சட்டமா அதிபர் உரிய தரப்பினருக்கு, உரிய நடவடிக்கையை எடுப்பதற்கான ஆலோசனையை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளார் எனவும் நிரா ஜயரத்ன குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தாக்குதல்தாரிகளுக்கு உதவி புரிந்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலான சந்தேகத்தின் பேரில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி, ரியாஜ் பதியுதீன் கைதுசெய்யப்பட்டிருந்தார். எனினும், 5 மாதங்களின் பின்னர் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அவர் மீது வழக்குத் தொடருவதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை எனத் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் அரச தரப்பு எம்.பிக்கள் 100 பேரின் கையொப்பத்துடன், ரியாஜ் பதியுதீனின் விடுதலை தொடர்பில் ஆட்சேபனை தெரிவித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் இது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெற்றிகரமாக ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பரீட்சை நடைபெற்றது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில் விசேட பரீட்சை நிலையங்கள் 12 அமைக்கப்பட்டிருந்தன.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இன்று காலை 9.30 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகியிருந்தது. சகல மாணவர்களும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி பரீட்சைக்கு வருகை தந்ததாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், கொட்டும் மழையினூடான கடும் காற்று, குளிர் ஆகியன பொருட்படுத்தாது மலையக மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

## தீர்ப்பின் பின்னரும் 20 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டாவது குடியரசு அரசமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீறுகின்றது. ஆகையால் இது முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பின்றி இதனை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தினோம்.

அரசமைப்புச் சட்டத்தில் சில முக்கிய உறுப்புரைகளை மீறுவதாக இருந்தால், மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதை அரசமைப்புச் சட்டம் சொல்கின்றது.

உயர்நீதிமன்றத்தில் இத்தகைய சட்டவரைவு சவாலுக்கு உட்படுத்தப்பட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை போதுமா அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா என்பதை மட்டும் தான் உயர்நீதிமன்றத்தால் தெரிவிக்க முடியும் என்றும் அரசமைப்புச் சொல்கின்றது.

அரசமைப்பில் சர்வஜன வாக்கெடுப்பு இன்றி மாற்றம் செய்யமுடியாத சரத்துக்களில் பிரதானமானது ஜனாதிபதிக்கு சட்டவிலக்கு கொடுப்பது சம்பந்தமானது.

இரண்டாவது குடியரசு அரசமைப்பின்படி ஜனாதிபதி அதிகாரத்தில் இருப்பவர் தன்னுடைய பதவிக் காலத்தின்போது, அவருடைய எந்தச் செயலையும் நீதிமன்றச் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்கின்ற அரண் போடப்பட்டது. அந்தக் காப்பரண் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சற்று விலக்கப்பட்டது.

அதன் மூலம் ஜனாதிபதி செய்த அல்லது செய்யாமல் விடுகின்ற தவறுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்திலே அடிப்படை மனித உரிமை மனுத் தாக்கல் செய்ய முடியும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஆட்சிக் கவிழ்ப்புத் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட அறிவிப்பை உயர்நீதிமன்றம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டே அவருக்கு எதிரான தீர்ப்பை வழங்கியதாக இருந்தது.

தற்போது 20ஆவது திருத்தச் சட்ட வரைவில் மீண்டும் இரண்டாவது குடியரசு அரசமைப்பின்படி ஜனாதிபதி அதிகாரத்தில் இருப்பவருக்கு மீண்டும் ஏற்படுத்த முயலும் சட்ட விலக்களிப்புக் காப்பரணுக்கு அனுமதி வழங்க முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதியான தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது என்ற சரத்தை மாற்றுவதற்கும் உயர்நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கும் பொது உத்தியோகத்தர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கும் அறிவுரைகள் பின்பற்றப்படாவிட்டால் அவை குற்றமாகும் என்ற அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதற்கு இருக்கும் அதிகாரத்தை விலக்க முடியாது என்றும், அவ்வாறு மாற்றுவதாக இருந்தால் அதுவும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்டவரைவின்படி ஒரு வருடத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம் என்று முன்மொழியப்பட்டிருந்தாலும் உயர்நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆட்சிக்காலத்தில் அரைவாசிக்காலத்தின் பின்னரே - அதாவது இரண்டரை வருடத்தின் பின்னரே - நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். அதற்கு முன்பாகக் கலைப்பதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இருந்த போதிலும் நாங்கள் முன்வைத்திருந்த குற்றச்சாட்டுக்களில் பல விடயங்கள் உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில், ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி நியமனங்கள் செய்கின்றபோது அதற்கான அனுமதியை அரசமைப்பு சபையிலே பெறவேண்டும் என்பது நீக்கப்பட்டு நாடாளுமன்ற சபை சில கருத்துக்களைச் சொல்லலாம் என்றும், ஜனாதிபதி தான் விரும்பியவர்களை நியமிக்கலாம் என்றும் கொண்டுவரப்பட்ட திருத்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதனை மூன்றில் இரண்டு பெரும்பாமைப் பலத்துடன் நிறைவேற்றலாம் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவ்வாறான ஆணைக்குழுக்களை சுயாதீன ஆணைக்குழுக்களாக அழைக்க முடியாது. இது ஜனாதிபதிக்கான அதிகாரத்தை அதிகரிப்பதாகவே அமையும் என்பதால் இதற்கு எங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கை தொடரும்.

இந்தத் தீர்ப்புக்குப் பின்னர் அரசு என்ன தீர்மானத்தை எடுக்கப் போகின்றது எனத் தெரியவில்லை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற விடயங்களைக் கைவிட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களை மட்டும் முன்னெடுப்பார்களா? அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்கின்ற விடயங்களையும் கூட நிறைவேற்றி, அந்த விடயங்களை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவார்களா என்ற தீர்மானத்தையும் அரசு அறிவித்த பின்னர் தான் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ள முடியும். உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக் குப் பின்னரும் குறித்த திருத்தச் சட்டவரைவுக்குஎதிரானஎமதுநிலைப்பாடு உறுதியாகத் தொடரும். எதிரணியில் உள்ள அனைவரும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். - என்றார்.

## பல்கலைக்கழக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது மரணத்தை கொரோனாத் தொற்றுடன் தொடர்புபடுத்தியதாக இன்று காலை ‘காலைக்கதிர்’ நாளிதழில் வெளியான செய்தி தவறானது எனச் சுட்டிக்காட்டப்படுள்ளது.

இந்தச் செய்தியினால் சம்பந்தப்பட்டோருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம். (ஆ-ர்)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பொறுப்புடன் செயற்படுவோம்

கொரோனாப் பேரரக்கன் தொடர்பில் தொடர்ந்து எச்சரிக்கை வெளியிடப்பட்டு வருகின்றது.

ஆனால், சம்பந்தப்பட்ட பிரதேசத்தவர்களும் மற்றும் பொது மக்களும் இவ்விவகாரம் தொடர்பில் அதிகம் கவனம் எடுப்பவர்களாகத் தோன்றவில்லை.

கொரோனா பரவல் பற்றிய செய்தியை அறிவதிலும், அது பற்றிய தகவல்கள், பிரச்சினைகள் குறித்து விடுப்புப் பேசுவதிலும் கவனம் காட்டும் நாங்கள் அது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவழக்கைகளைக் கைக்கொள்வதில் போதிய சிரத்தை எடுப்பவர்களாக இல்லை என்பதுதான் இதில் அதிக வேதனையான – துன்பியல் – நிலைமையாகும்.

கொரோனாவின் கொடூரம் பற்றிய முழு விழிப்புணர்வு சமூகத்தில் பெரும்பாலானோருக்கு – கணிசமானோருக்கு – உண்டு. அந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கு முன்னெச்சரிக்கையாக நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது, ஏன் செய்ய வேண்டும் அல்லது ஏன் செய்யக் கூடாது. என்பவை எல்லாம் எமக்குத் தெரியும். ஆனால் செய்ய வேண்டியதை செய்யாமலும், செய்யக் கூடாதவற்றைச் செய்தும் கொண்டிருக்கின்றோம்.

இத்தவறுக்கு என்ன காரணம்?

எமது அலட்சியம் – சிரத்தையின்மை – பொறுப்பற்ற போக்கு – விட்டேத்தித்தனம் – இப்படிப் பலவற்றைக் கூறலாம்.

அலட்சியமாக நடப்பதன் மூலம் நமக்கு நாமே வேட்டு வைக்கின்றோம், அத்துடன் சமூகத்துக்கும் தேவையற்ற இக்கட்டை ஏற்படுத்துகின்றோம் என்பதை நாம் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை.

நம்மைப் போன்று, நம்மைப் பார்த்து, அயலவன், சுற்றத்தவன், அக்கம்பக்கத்தவன், நம் உறவினன் நடந்து கொள்கின்றான். அதன் மூலம் அவர்கள் ஒவ்வொருவரும், எம்மையும் சேர்த்து, ஆபத்துக்குள் – அல்லது நெருக்கடிக்குள் – தள்ளி விடுகின்றார்கள் என்பதை அவர்களும் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை. நாங்களும் புரிந்து கொண்டு நடக்கின்றோம் அல்லர்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் கொரோனாத் தொற்றாளர்கள் எங்குள்ளார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியாத இக்கட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது என வைத்திய பரிசோதனை நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் ஜயருவன் பண்டார தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறான ஆபத்தான சூழ்நிலையில் மக்கள் மிகுந்த அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

மக்கள் அவதானமாகச் செயற்படவில்லை என்றால் எதிர் வரும் நாள்களில் இந்தியா போன்று இலங்கையிலும் நோயாளிகள் அதிகரிக்க வாய்ப்புகள் தாராளமாக உள்ளன எனவும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

இந்திய நிலைமையை இலங்கைக்குள் அனுமதிக்கப் போகின்றோமோ அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய இறுதிக் கட்டத்தில் நாம் நிற்கிறோம்.

கொரேனாவைக் கட்டுப்படுத்துவது, அது தொடர்பான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பது, தந்திரோபாய நகர்வுகளை மேற்கொள்வது எல்லாம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி, கொரோனாத் தடுப்பு செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவீந்திர சில்வா, சம்பந்தப்பட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அதிகாரிகள், படையினர், பொலிஸார் போன்ற தரப்பினரின் வேலை என்பது போலவும், அவர்களின் முடிவுகளையும், தீர்மானங்களையும், அவதானித்து விமர்சித்துக் குறை சொல்வதுடன் எங்கள் பணி முடிந்து விடுகிறது என்பது போலவும்தான் நம்மில் பலர் நடந்து கொள்கின்றார்கள். சில சமயம் இந்தப் பொறுப்பு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ் போதனா ஆஸ்பத்திரி மருத்துவப் பணிப்பாளர் முதலியோரின் பணி என்பது போன்ற தொனிப்புடன் நம்மில் பலர் கருமமாற்றுகின்றனர்.

உண்மையில், கொரோனாக் கட்டுப்படுத்தல் என்ற விடயத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பேற்று, பங்களித்து, நெறிமுறைப்படி நடந்து கொண்டால் மட்டுமே இதனைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும்.

இப்போது அடையாளம் காணப்படுகின்ற கொரேனா நோயாளர்களின் தொற்றில் வைரஸ் செறிவு மிக அதிகமாக இருக்கின்றமையை யாழ் போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சி.யமுனானந்தா சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறு வைரஸ் தொற்றின் செறிவு கூடவாக இருக்குமாயின் அத்தகையோர் மூலம் ஏனையோருக்கும் அந்த வைரஸ் பரவும் ஆபத்தும் அதிகம் என்றும் அவர் தெளிவுபடுத்துகின்றார்.

தவறாமல் முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், கூட்டமாக இருக்கும் இடங்களைத் தவிர்த்தல், வீண் பயணங்களை முற்றாக நிறுத்துதல், சமூக இடைவெளியைத் தவறாது பின்பற்றுதல் முதலிய ஆலோசனைகளை ஒழுங்காகக் கைக்கொள்வோமானால் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதில் ஆக்கபூர்வமாக நாம் பங்களிக்க முடியும்.

இன்றைய நிலைமையில் பொறுப்புணர்ந்து செயற்படுவது நமது சமூகக் கடமையாகின்றது.

# கொரோனாவைத் தடுக்கும் வகையில் இலங்கை தயாரித்துள்ள புதிய மருந்து



கொரோனா வைரஸால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக இலங்கை சுதேச மருத்துவ அமைச்சால் ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுதேச மருத்துவத்தை ஊக்குவித்தல், கிராமப்புற மற்றும் ஆயுர்வேத மற்றும் பொது சுகாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஆயுர்வேத திணைக்களமும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனமும் இணைந்து நோய் எதிர்ப்புப் பானத்தையும் மருந்துத் தூளையும் அறிமுகப்படுத்தியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருந்துகள் அனைத்தும் 100 சதவீத உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டவை எனவும், அவை ‘சதங்கா பனம்’ மற்றும் ‘சுவாதாரணி நோய்த்தடுப்பு பானம்’ எனப் பெயரிடப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த மருந்துகள் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் சந்தையில் அறிமுகப் படுத்தப்படும்.

தற்போதைய நிலைமையில் மேற்கத்தேய மருத்துவத்தால் இன்னும் கொரோனா வைரஸுக்கு எதிரான மருந்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இருப்பினும், இந்தச் சவாலைச் சமாளிக்கக்கூடிய மருந்துகளை உற்பத்தி செய்யும் திறன் எமது சுதேச மருத்துவ அமைச்சுக்கு உள்ளது – என்றார்.

இந்த மருந்துகள் நேற்று நாடாளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சரினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டன.

# ஆடைத்தொழிற்சாலையின் ஊழியர்களுடன் பழகிய அனைவருக்கும் பி.சி.ஆர். சோதனை!

## என்கிறார் இராணுவத் தளபதி சவேந்திரசில்வா

மினுவாங்கொட பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்குப் பின்னர் மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரிந்த எந்தவொரு நபருடனும் நெருங்கிய தொடர்பைப் பேணிய அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொட கொரோனா கொத்தணியில் ஆயிரத்து 83 பேருக்கு இதுவரை வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் அதன், அநேகமான ஊழியர்கள் தற்போதைய நிலையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.



இதேவேளை, நாட்டில் தற்போது அடையாளம் காணப்பட்ட புதிய தொற்றாளர்கள் அனைவரும், மினுவாங்கொட கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சமூக மட்டத்தில் எவரும் அடையாளம் காணப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# மரணதண்டனை தொடர்பான தீர்மானம் இலங்கைக்கு ஜேர்மன் அரசு பாராட்டு!

1976 முதல் இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை பாராட்டப்பட வேண்டும் என இலங்கைக்கான ஜேர்மன் தூதர் ஹொல்கர் சீபர்ட் குறிப்பிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்திலேயே அவர் இதை தெரிவித்துள்ளார்.

இதேபோல் கடந்த ஆண்டுகளில் உலகெங்கிலும் அதிகமான நாடுகள் மரண தண்டனையை கட்டுப்படுத்துவதுடன், சில நாடுகள் ரத்து செய்துள்ளன.

60 இற்கும் குறைவான நாடுகள் மரண தண்டனையை தொடர்ந்து முன்னெடுக்கின்றன. அவற்றில் ஜேர்மனியின் நெருங்கிய பங்காளிகளான ஜப்பான் மற்றும் அமெரிக்கா அடங்கும்.

ஐரோப்பாவில், மரண தண்டனையைப் பயன்படுத்தும் ஒரே நாடு பெலாரஸ் தான்.

கடந்த ஆண்டு அதிகளவாக சீனாவில் 650 இற்கும் மேற்பட்ட மரண தண்டனைகளும் ஈரானில் 250 இற்;கும் மேற்பட்ட மரண தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

மரண தண்டனையை ஒழிப்பதற்கான முயற்சிகளை ஆதரிப்பது ஜேர்மனிய மனித உரிமைக் கொள்கையின் முன்னுரிமையாகும்.

ஐரோப்பிய ஒன்றிய கூட்டணியுடன் சேர்ந்து, ஜெர்மனி பல ஆண்டுகளாக மரண தண்டனைக்கு எதிராக தீவிரமாக பிரசாரம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூன்று பேருக்குக் கொரோனா தொற்று!

கொழும்பு, ஒக்.11

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப் பிரிவு மற்றும் இரண்டு சிகிச்சை அறைகள் மூடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்களில் மூவருக்கே இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக பாணந்துறை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் பணிபுரிகின்ற தாதியின் மகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் கொரோனா அதிகரிப்பது தமிழகத்துக்குப் பெரும் சவாலாகும்!

## சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர்

கேரளாவில் கொரோனா பரவல் அதிகரிப்பது தமிழகத்துக்கு பெரும் சவாலாக உள்ளது என சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

கொரோனாவை சிறப்பாக கையாண்டு பாராட்டு பெற்ற கேரளாவில், இப்போது தொற்று எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று ஒரே நாளில் 11 ஆயிரத்து 755 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 77 ஆயிரத்து 855 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் -

கொரோனா பரவல் அதிகரித்தருப்பதால் தமிழக எல்லையோர மாவட்டங்கள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. மழைக் காலம் மற்றும் பண்டிகைக் காலம் தொடங்குவதால் சவால் நிறைந்த காலகட்டமும் தொடங்குகிறது.

கேரளாவில் கொரோனா பரவல் அதிகரிப்பது தமிழகத்திற்கு பெரும் சவாலாக உள்ளது. வெளி மாநிலங்களில் இருந்து வரும் நபர்கள் கண்காணிப்பு மற்றும் பரிசோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகிறார்கள். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணியில் எந்தக் குழப்பமும் கிடையாதாம்!

## பொன். இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



அ.தி.மு.க – பா.ஜ.க.கூட்டணியில் எந்த குழப்பமும் இல்லை என முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி – நாகர் ஆலயத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஊடகவியலாளர்களை சந்தித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, பொன்.இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பாரத பிரதமர் சிறப்பாக செயற்பட்டமையால் கொரோனா தொற்று குறைந்துள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதலை மாநில அரசுகள் முறையாகப் பின்பற்ற வேண்டும்.

இதேவேளை அ.தி.மு.க.வினர் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் முதல்வர் வேட்பாளரைத் தேர்ந்தெடுதுள்ளனர்.

மேலும், அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சில கட்சிகள் எதிர்பார்த்தமை போல் இல்லாமல் நடந்து இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் வருகின்ற தேர்தலில் மூன்றில் ஒருபங்கு வாக்குகளை பெற்றாலும் அதில் சந்தோமாக இருக்கும். தமிழ் நாட்டில் எங்கள் தலைமையில் கூட்டணி இல்லை. அ.தி.மு.க.தலைமையில் கூட்டணி உள்ளது.

எனவே எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு அரசு அமையும்போது அதில் அங்கம் வகிக்கும் கட்சியாக பா.ஜ.க. நிச்சயம் இருக்கும்.

அ.தி.மு.க, பா.ஜ.க.கூட்டணியில் எந்த குழப்பமும் இல்லாமல் நாங்கள் இருக்கிறோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களிடையே சாதிவெறுப்பை தூண்டுகின்றது காங்கிரஸ்!

## உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் குற்றச்சாட்டு

மக்களிடையே சாதிவெறுப்பை காங்கிரஸ் தூண்டுகிறது என உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் – ஜான்பூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு அடுத்த மாதம் இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் நடைபெற்ற பா.ஜ.க.தொண்டர்கள் கூட்டத்தில் யோகி ஆதித்யநாத் மேலும் கூறியுள்ளதாவது,

கொரோனா காலத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், சொந்த ஊருக்குத் திரும்ப நாம் தீவிர நடவடிக்கை எடுத்து வந்தோம்.

ஆனால், காங்கிரஸ் கட்சி தொழிலாளர்களுக்காக பஸ்களை இயக்குவதாகக் கூறி, சதி வேலையில் ஈடுபட்டது. செயலிழந்த லொறிகளை கொடுத்து மக்களின் உயிரோடு காங்கிரஸ்



விளையாடியது. அந்த சதி அதோடு முடிந்துவிடவில்லை.

காங்கிரஸ் தொடர்ந்து சதி வேலையில் ஈடுபட்டு வருகிறது. அக்கட்சி மக்களிடையே சாதி வெறுப்பைத் தூண்டி விடுகிறது.

எனது அரசு பதவி ஏற்றதில் இருந்தே சாதிக் கலவரத்தை தூண்டிவிட சதி நடக்கிறது. ஆனால், அந்த சதியை முறியடித்து வருகிறோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹர்த்தாஸ் பாலியல் படுகொலை சி.பி.ஐ. விசாரணைகள் ஆரம்பம்

ஹத்ராஸ் பாலியல் படுகொலை தொடர்பான வழக்கைப் பதிவு செய்த சி.பி.ஐ, தனது விசாரணையை ஆரம்பித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி, தமது சகோதரியை, கொல்ல முயன்றதாக சந்தேகநபர்கள் மீது முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் கூட்டுப் பாலியல் மற்றும் கொலைக்குற்ற பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சி.பி.ஐ.செய்தித் தொடர்பாளர் ஆர்கே.கவுர் தெரிவித்தார்.

உத்தர பிரதேச அரசின் கோரிக்கை மற்றும் மத்திய அரசு பிறப்பித்த அறிக்கையின் படி இந்த வழக்கை சி.பி.ஐ.விசாரணைக்குக் கொண்டுச் சென்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 14 ஆம் திகதி, ஹத்ராஸ் மாவட்டத்தில் 4 பேரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி, சித்திரவதை செய்யப்பட்ட இளம்பெண், கடந்த 28 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி டெல்லி சப்தர் ஜங் வைத்தியசாலையில் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் தொற்று 70 லட்சத்தைக் கடந்தது!

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 70 லட்சத்தைக் கடந்துள்ளது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸால் அமெரிக்காவை அடுத்து அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடாக இந்தியா இடம்பிடித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 13 நாள்களில் மட்டும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை பத்து லட்சம் அதிகரித்துள்ளது.

நேற்று மாத்திரம் 74 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 70 லட்சத்து 51 ஆயிரத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இதேநேரம் நேற்று மாத்திரம் 921இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 8 ஆயிரத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இதேவேளை கொரோனா தொற்றில் இருந்து இந்தியாவில் இதுவரை 60 லட்சத்து 74 ஆயிரத்து 863 பேர் குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 8 லட்சத்து 68 ஆயிரத்து 309 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் 8 ஆயிரத்து 944 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவின் வடக்கு எல்லையில் 60 ஆயிரம் சீன இராணுவம் குவிப்பு

## அமெரிக்க அமைச்சர் மைக் பொம்பியோ தகவல்



இந்தியாவின் வடக்கு எல்லை பகுதியில் 60 ஆயிரம் வீரர்களை சீனா குவித்துள்ளதாக அமெரிக்க அமைச்சர் மைக் பொம்பியோ கூறிய தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு லடாக்கில் சீன இராணுவத்தின் அத்துமீறல் முயற்சிகளால் இருநாட்டு வீரர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டு, உயிரிழப்புக்களும் பதிவாகின.

இதனைத்தொடர்ந்து கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக லடாக் எல்லையில் பதற்றம் நீடித்து வருகிறது.

அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக இரு நாட்டு இராணுவ அதிகாரிகள் மட்டத்திலும், தூதரக ரீதியிலும் தொடர்ந்து பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், இந்தோ – பசுபிக் நாடுகளான இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை டோக்கியோவில் சந்தித்துப் பேசினர்.

கிழக்கு லடாக், இந்தோ – பசுபிக் பிராந்தியம் மற்றும் தென்சீனக்கடல் பகுதிகளில் சீனாவின் அத்துமீறல்களுக்கு மத்தியில், இந்த பிராந்தியங்களில் சீனாவின் எழுச்சி குறித்து இந்த நாடுகள் விவாதித்தன.

இந்த கூட்டத்தில் இந்தியாவின் ஜெய்சங்கர், அமெரிக்காவின் மைக் பொம்பியோ உட்பட 4 நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்று தனித்தனியாகவும், குழுவாகவும் சந்தித்துப் பேசினர்.

இந்தக் கூட்டத்தை முடித்துக்கொண்டு அமெரிக்கா திரும்பிய மைக் பாம்பியோ, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோது –

இந்தியா – சீன மோதல் தொடர்பாகவும் தெரிவித்திருந்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் – மிகப்பெரிய ஜனநாயகம் மற்றும் வலுவான பொருளாதாரம் கொண்ட 4 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்து பேசினோம்.

இந்த நாடுகள் அனைத்தும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் அச்சுறுத்தலால் உண்மையான ஆபத்தில் இருக்கின்றன. இந்தியர்கள் தங்கள் வடக்கு எல்லையில் 60 ஆயிரம் சீன வீரர்களை பார்த்து வருகின்றனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி பல பத்தாண்டுகளாக நம்மை ஆதிக்கம் செலுத்த மேற்கு உலகம் அனுமதித்து இருக்கிறது. இதை அனைவரும் பார்த்துள்ளனர். இந்த விவகாரத்தில் நீண்ட காலமாக நாம் தூங்கிக்கொண்டு இருந்தோம் என்பதை குவாட் நாடுகளின் மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவிலும் முந்தைய நிர்வாகம் சீனாவிடம் மண்டியிட்டு உள்ளது. எங்கள் அறிவுசார் சொத்துகளை சீனா அடிக்கடி களவாடி இருக்கிறது. லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளும் அவர்களே எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

சீனாவின் அத்துமீறலை எதிர்க்கும் போராட்டத்தில் குவாட் உறுப்பு நாடுகளின் கூட்டாளியாகவும், பங்காளியாகவும் அமெரிக்காவும் நிச்சயம் இருக்க வேண்டும். அது இந்தியர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் இமயமலையில் வடகிழக்கு பகுதியில் சீனாவுடன் நேருக்குநேர் மோதி வருகிறார்கள். இந்தியாவுக்கு எதிராக வடக்கு எல்லையில் சீனா பெருமளவில் படைகளைக் குவித்து வருகிறது.

மொத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியால் அச்சுறுத்தல் என்பதை அனைத்து நாடுகளும் உணர்ந்திருக்கின்றன. உலகம் தற்போது விழித்திருக்கிறது. அலை திரும்ப தொடங்கி இருக்கிறது. இந்த அச்சுறுத்தலில் இருந்து அமெரிக்க மக்களை பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.






# தாய்லாந்தில் கோர விபத்து 17 பேர் பலி பலர் காயம்!

தாய்லாந்தில் ரயிலுடன் பஸ் மோதிய விபத்தில் 17 பேர் மரணித்துள்ளமையுடன் 29 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிலிருந்து சா சோயெங் சாவோ மாகாணத்தில் உள்ள ஒரு கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸே இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கோரா விபத்தைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றமையுடன் படுகாயமடைந்தவரகளில் பலர் உயிருக்குப் போராடி வரும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாக மாகாண ஆளுநர் மைட்ரீ ரிதிலனண்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான கோர விபத்துக்கள் தாய்லாந்தில் பொதுவானவை எனவும் இது உலகின் மிக ஆபத்தான சாலைகள் கொண்ட நாடுகளின் பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் 2018 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, தாய்லாந்து உலகில் இரண்டாவது இடத்தில் அதிக போக்குவரத்து இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தடுப்பூசி விநியோகம் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும்!




கொரோனா தடுப்பூசி மருந்து விநியோகம், 2021 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை, உதவி செயலாளர் ரொபர்ட் கேட்லெக், கொரோனா தடுப்பூசி மருந்தைப் பாதுகாப்பான முறையில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு தடுப்பூசி மருந்திற்கான அங்கீகாரம் கிடைத்து விடும் என எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, 2021 ஜனவரி முதல், தடுப்பூசி மருந்தின் விநியோகம் ஆரம்பிக்கும் என்றும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முடிந்தவரை விரைவாக, தடுப்பூசி விநியோகிக்கப்பட வேண்டும் என விரும்புகிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனால், ஜனவரிக்கு முன்னதாக தடுப்பூசி விநியோகம் ஆரம்பிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிலமணி நேரங்களில் மீறப்பட்டது ஒப்பந்தம்

### ஆர்மீனிய தாக்குதலில் 7 பேர் உயிரிழப்பு



அசர்பைஜானின் இரண்டாவது தலைநகரமான காஞ்சாவில் ஆர்மீனிய இராணுவம் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அசர்பைஜான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் இரு நாடுகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் எட்டப்பட்ட சில மணிநேரங்களில் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நடந்த பேச்சுக்களில் போரை நிறுத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன், நாகோர்னோ – கராபக் பகுதியில் இடம்பெற்ற மோதலில் கைதான இரு நாட்டுப் படைவீரர்களின் இடமாற்றம் மற்றும் போரில் இறந்தவர்களை ஒப்படைப்பதற்காகப் போராட்டத்தை நிறுத்துவது உள்ளிட்ட விடயங்கள் பேச்சுகளில் ஒப்புக்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த சில நிமிடங்களிலேயே இரு தரப்பினரிடையே மோதல் நடைபெற்றுள்ளமையுடன் இருதரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டுகளை முன்வைத்து வருகின்றன.

## பெருவில் வேகமாகப் பரவும் காட்டுத் தீ 700 ஹெக்டேயர் காணிகள் எரிந்து நாசம்!



பெருவில் சாக்சயுவமான் தொல்லியல் பூங்காவிற்கு அருகே ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பெருவின் தெற்கு பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த காட்டுத்தீயால் 700 ஹெக்டேயர் பரப்பிலான காடுகள் தீக்கிரையாகின.

இந்நிலையில், கஸ்கோ பகுதியில் உள்ள தொல்லியல் பூங்கா பகுதிகளுக்குத் தீ பரவாமல் தடுக்க ஹெலிகொப்டர்கள் மூலம் தண்ணீர் பீய்ச்சியடிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் அந்த பகுதியில் பலத்த காற்றும் வீசுவதால் தீயைக் கட்டுப்படுத்தும் பணிகள் சவாலாக உள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கிரேட்டா தன்பெர்க் ஜோபிடனுக்கு ஆதரவு

சுவீடன் நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரான சிறுமி கிரேட்டா தன்பெர்க், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பிடனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ள அவர், சுற்றுச்சூழல் தொடர்பாகக் கவலை கொள்ளும் அமெரிக்கர்கள் அனைவரும், ஜோ பிடனுக்கு வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசாங்கம் கடும் போக்குடன் செயற்படுவதாக உலக நாடுகள் மத்தியில் விமர்சிக்கப்பட்டது. அத்துடன், 2015ஆம் ஆண்டு பரீஸ் நகரில் உலக நாடுகள் ஒன்றிணைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் அதிலிருந்து விலகுவதாக அமெரிக்கா கடந்த நவம்பரில் அறிவித்தது.

இந்நிலையில், காலநிலை மாற்றம் தொடர்பாகப் போராட்டங்களால் உலகளாவிய ரீதியில் ஈர்க்கப்பட்ட 17 வயது சிறுமியான கிரேட்டா தன்பெர்க்கும் ட்ரம்புக்கு எதிராக விமர்சனத்தை முன்வைத்தார்.

இந்த சூழலில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது முறையாக போட்டியிடுகின்றமையால் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடனுக்கு தனது ஆதரவை கிரேட்டா தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியாவில் கொரோனாத் தொற்று 5 லட்சத்து 75 ஆயிரத்தை தாண்டியது

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந்தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஐந்து லட்சத்து 75 ஆயிரத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின் படி, பிரித்தானியாவில் ஐந்து லட்சத்து 75ஆயிரத்து 679 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் பிரித்தானியாவில் வைரஸ் தொற்றால் 13ஆயிரத்து 864பேர் பாதிக்கப்பட்டனர். மேலும் 87 பேர் உயிரிழந்துள்ளனர். உலக அளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 12 ஆவது நாடாக விளங்கும் பிரித்தானியாவில் இதுவரை மொத்தமாக 42ஆயிரத்து 679பேர் உயிரிழந்துள்ளனர்.

# அனலைதீவும் காரைநகரும் முடக்கத்திலிருந்து விடுவிப்பு!



யாழ்ப்பாணம், ஒக்.11

அனலைதீவு மற்றும் காரைநகர் பகுதிகளில் ஏற் படுத்தப்பட்டிருந்த தற்காலிக முடக்கம், இன்று (ஞாயிற் றுக்கிழமை) முதல் நீக்கப்பட்டுள்ளதென யாழ்ப்பாணம் மாவட்டசெயலர் க.மகேசன் அறிவித்துள்ளார்

கொரோனாத் தொற்று பரவல் சந்தேகத்தில், கடந்த இரண்டு நாள்களுக்கு முன், அனலைதீவு பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தனிமைப் படுத்தப்பட்டிருந்த இரண்டு பேருக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் அவர்களுக்கு தொற்று இல்லை என்பது சுகாதாரப்பிரி வினரால் உறுதி செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

எனவே, அனலைதீவு மற்றும் காரைநகர் பகுதி களில் ஏற்படுத்தப்பட்டிருந்த தற்காலிக முடக்கம், இன்று முதல் நீக்கப்பட்டுள்ளது என க. மகேசன் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அண்மையில் மினுவாங்கொடை ஆடை தொழிற் சாலையில் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து நாட்டின் பல பாகங்களில் கொரோனா தொற் றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே கொரோனா அச்சம் காரண மாக அனலைதீவு பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் முடக்கம் தளர்த்தப்பட்டுள்ளது.

# ஆதிகாரங்களைப் பரவலாக்கல் நாட்டைப் பிரிக்க வழிசெய்யும்!

## சுரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.11

அதிகாரங்களைப் பரவலாக்கல் என்பது நாட்டை பிளவுப்படுத்த வழி வகை செய்யும் என்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்வில் சரத்வீரசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அதிகாரப் பரவலாக்கல் என்பது மிகவும் ஆபத்தான ஒன்றாகும். அதி காரம் என்பது மத்திய அரசாங்கத்திடம் மட்டும்தான் இருக்க வேண்டும்.

இது பகிரப்படுவதானால், அது பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதுதான் நாட்டை பிளவு படுத்துவதற் கும் வழிவகுக்கும்.

ஆனால், அனைவருக்கும் அதி காரங்கள் இருக்க வேண்டும். இது தான் அரசாங்கத்தினதும் நோக்க மாகும். தற்போது மாகாணசபை முறைமை தொடர்பாக ஆராயவேண் டிய நிலைமையில் இருக்கிறோம்.

மாகாண சபை முறைமை இல் லாமல் தற்போது இரண்டு வருடங் களை நாம் கடந்து விட்டோம். இந்த நிலையில், நாட்டு மக்களுக்கு ஏற் பட்டுள்ள சாதக - பாதக நிலைமைகள் தொடர்பாக ஆராயவேண்டும்.

இதனால், நாடு பின்நோக்கி நகர்ந்துள்ளதா, அல்லது நன்மை ஏற் பட்டுள்ளதா என்பதை ஆராயவேண் டும். நிதி விவகாரம் தொடர்பாகப் பார்க்க வேண்டும்.



வளர்ந்துவரும் ஒரு நாட்டில் நிதி யை அநாவசியமாக பயன்படுத்தக் கூடாது. இதனால்தான் மாகாண சபை முறைமை தொடர்பாக ஆராயவேண் டும் என நாம் வலியுறுத்துகிறோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# களனி பல்கலைக் கழக மாணவிக்கு கொரோனா!

களனி பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

மினுவங்கொட பகுதியை சேர்ந்த குறித்த மாணவியின் தந்தை கொரோனா கொத்தணி பர வியுள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

களனி பல்கலைகழகத்தில் சமூக விஞ்ஞான பீடத்தில் குறித்த மாணவி கல்வி பயிலுகின்றார்.

இந்நிலையில், மாணவியுடன் தங்கியிருந்த மேலும் இரு மாணவிகள் பி.சி.ஆர். பரிசோதனை களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தை சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

# வானிலை எச்சரிக்கை

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகா ணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங் களிலும் அவ்வப்போது மழையோ அல் லது இடியு டன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ இற்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட் டத்திலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது. மேலும் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்க ளில் சில இடங்களில் இரவில் மழை யோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய் யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கிளிநொச்சியில் 100 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது!

கிளிநோச்சி - ஜெயபுரம் மக்களுக்கான 100 ஏக்கர் காணி இன்று (ஞாயிற்றுக்கிழமை) விடுவிக்கப்பட்டது.

ஜெயபுரம் மக்களால் 520 ஏக்கர் காணி கோரப்பட்டு வந்த நிலையில், இன்று 100 ஏக்கர் காணி விடுவிக்கப் பட்டுள்ளது.

குறித்த காணியானது பூநகரி பிரதேச செயலகம் ஊடாக மக்களிற்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த பகுதி யில் மக்கள் குடியேற்றப்பட்டனர். இதன்போது அவர் களுக்கு தலா ஓர் ஏக்கர் வயற்காணி வழங்குவதாக கூறப்பட்டது.

இவ்வாறான நிலையில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக காணியை மக்களால் பராமரிக்க முடிய வில்லை. இந்த நிலையில் காணிகள் பற்றை காடுகளாக மாற்றம் பெற்றன.

குறித்த காணியில் செய்கையை ஆரம்பிக்க வன வள பாதுகாப்பு திணைக்களம் தடை விதித்திருந்தது.

இவ்வாறான நிலையில் மக்களால் பல்வேறு தரப் பிடமும் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 100 ஏக்கர் காணி இன்று விடுவிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹாவில் ஊரடங்கு தொடர்ந்தும் நீடிப்பு!

கம்பஹாவில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம், தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ள னர்.

எனினும், குறித்த 18 பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட சதோச பல்பொருள் அங்காடிகள் மற்றும் அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) திறக்கப்படும் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலை யில் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைமயைத் தொடர்ந்து மேலும் பலர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்நிலையிலேயே கடந்த திங்கட்கிழமை முதல் கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

அதாவது, சுகாதார பரிந்துரைகளுக்கு அமைவாக காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையில் சதோச, பல் பொருள் அங்காடிகள் மற்றும் அத்தியாவசிய பொருளகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட உள் ளன என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கு மீறிய 101 பேர் கைது!

பொலிஸ் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச் சாட்டின் கீழ் இதுவரையில் 101 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

மேலும் ஊரடங்குக் காலப்பகுதியில் 28 வாகனங் களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் மினுவாங் கொடை ஆடை தொழிற்சாலையில் பெண்ணொ ருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து மேலும் பலர் கொரோனா தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது. அதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய, மினுவாங்கொட, ஜா -எல, கந்தான மற்றும் கம்பஹா பொலிஸ் பிரிவு, கிரிந்திவெளல, தொம்பே, பூகொட, கனேமுல்ல, வீரகுல, வெலி வேரிய, மல்வத்துஹிரிபிட்டிய, நிட்டம்புவ, மீரிக ம, பல்லேவெல, யக்கல, சீதுவ மற்றும் கந்தான ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டது.

இந்தப் பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் மீள அறிவித்தல் வரை தொடரும் என பொலிஸார் அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# வவுனியாவில் 1,591 சாரதிகளுக்கு எதிராக போக்குவரத்துப் பொலீஸார் நடவடிக்கை!

வவுனியா, ஒக். 11

வவுனியாவில் போக்குவரத்து விதி முறைகளை மீறி, வாகனம் செலுத் திய 1591 வாகனச்சாரதிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல், தண்டப்பணம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என வவுனியா போக்கு வரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வவுனியா போக்குவரத்து பொலி ஸாரால் போக்குவரத்து விதிமுறை களை மீறி வாகனம் செலுத்தும் சாரதி களுக்கு எதிராக பல்வேறு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

அந்தவகையில், கடந்த செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 83 சாரதிகள், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாக னம் செலுத்திய 8 பேர் உட்பட 91 சாரதி களுக்கு எதிராக வவுனியா நீதிமன் றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

வாகன காப்புறுதிப்பத்திரம், போக்கு வரத்து அனுமதிப்பத்திரம் இல்லாமை, தவறான முறையில் வாகனம் செலுத் தியமை, வாகனம் செலுத்தும்போது தொலைபேசிப் பாவனை, வாகன இருக்கைப்பட்டி அணியாமை போன்ற 1500 சாரதிகளிடம் சிறு குற்றங்களுக்கு எதிராக தண்டப்பணம் அறிவிடப்பட் டுள்ளது

இவ்வாறு கடந்த ஒரு மாதகாலப் பகுதியில், போக்குவரத்து விதிமுறை சட்டங்களை மீறிய 1591 வாகனச் சார திகளுக்கு எதிராக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது .

இவ்வாறு எதிர்வரும் காலங்க ளிலும், போக்குவரத்து பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெ டுக்கப்படும். - என அவர் குறிப்பிட்டுள் ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2020 இல் வெளியிடப்பெற்றது.